மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தினுடைய நியாயத்தை உணர்ந்துதான் அரசு அதைச் செப்பனிடுவதற்காக ஒரு மதிப்பீட்டைத் தயார் செய்து கொண்டிருக்கிறது.

பேரூராட்சி, நகராட்சிகளால் மின்துறைக்குச் செலுத்த வேண்டிய அபராதக் கட்டணத் தொகை.

* 9308—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

பேரூராட்சி, நகராட்சிகளால் மின்துறைக்கு செலுத்த முடியாமல் நிலுவையில் உள்ள காலதாமத அபராதக் கட்டணத் (B. P. S. C.) தொகைகளை, விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்ததைப் போல தள்ளுபடி செய்ய அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

பேரூராட்சி, நகராட்சிகளால் மின் துறைக்குச் செலுத்த முடியாமல் நிலுவையில் உள்ள காலதாமத அபராத கட்டணத் (B.P.S.C.) தொகைகளை தள்ளுபடி செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது இல்லை என்று சொன்னார்கள். குறிப்பாக, நான் ஒரு பஞ்சாயத்துக்காகச் சொல்லவில்லை. எல்லாப் பஞ்சாயத்துக்களுக்காகவும் சொல்கிறேன். குறிப்பாக வேதாரண்யம் பேரூராட்சியில் 80,000 ரூபாய் கட்டுவதற்கு 1,90,000 ரூபாய் அபராத வட்டி என்று போட்டிருக்கிறார்கள். இப்படியென்று சொன்னால், நகராட்சிகள் எந்த முறையிலே, பேரூராட்சிகள் எந்த வகையிலே பணம் கட்ட முடியும் ? இந்தப் பெயரைச் சொல்லி, இப்பொழுது பேரூராட்சியிலிருந்து தீர்மானங்கள்—தெரு விளக்குகளுக்குத் தீர்மானம் கொடுத்தால் நம்முடைய இலாக்கா அதற்கு அனுமதி வழங்குவது இல்லை. தெரு விளக்குப் போடுவது இல்லை. ஆகவே, இப்பொழுது புதிதாகத் தெரு விளக்குகள் போட முடியாத நிலை இருக்கிறது. நிலுவையிலுள்ள அபராத வட்டியைக் கட்ட முடியாத நிலையும் இருக்கிறது. ஆகையினால், தயவு செய்து அமைச்சரவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இப்படி ஒரு துறைக்கு ஒரு சலுகை காட்டினால், எல்லாத் துறைகளிலிடமிருந்தும் இத்தகைய கோரிக்கைகள் மின் வாரியத்திற்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. வந்து கொண்டிருக்கிறது. அவைகளுக்கும் இப்படித் தள்ளுபடி செய்து கொண்டே போனால் கடைசியிலே மின் வாரியத்தையே நாம் தள்ளுபடி செய்ய வேண்டிய நிலைக்கு வந்துவிடும். இப்பொழுதே போலீஸ் இலாக்காவிடமிருந்து இத்தகைய விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. From other Government Departments எங்களுக்கு விண்ணப்பம் வந்திருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து வந்திருக்கிறது. ஆகவே, இந்த நிலையை நீடிக்க விட முடியாது. ஏற்கனவே மின்சார வாரியம் பெரிய இழப்பிலே இருக்கிறது. இதைத் தாங்க முடியாது.

கலப்பு மணத் தம்பதிகளுக்கு கடன் வழங்கலில் முன்னுரிமை.

* *2114*— திரு. கே. ஆர். ஜி. தனபாலன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) கலப்பு மணத் தம்பதிகளுக்கு பல்வேறு அரசு நிறுவனங்கள் மூலமும், அரசு நிதிகள் மூலமும் வழங்கப்படும் கடன்களில் முன்னுரிமை கொடுக்கப்படுமா ?

(ஆ) உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களால் கட்டப்படும் கடைகளை அவர்களுக்குக் குறைந்த வாடகையில் ஒதுக்கித்தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கலப்பு மணத் தம்பதிகளுக்குப் பல்வேறு அரசு நிறுவனங்களின் மூலமும், அரசு நிதிகள் மூலமும் வழங்கப்படும் கடன்களில் முன்னுரிமை இல்லை.

(ஆ) உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களால் கட்டப்படும் கடைகளை அவர்களுக்குக் குறைந்த வாடகையில் ஒதுக்குவது குறித்து அரசினுடைய பரிசீலனை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணத் தம்பதிகளுக்குப் பல்வேறு அரசு நிறுவனங்களின் மூலமும், அரசு நிதிகள் மூலமும் கடன் வழங்கவில்லை என்றாலும்கூட, அவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்குவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.